(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும் ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): இல்லை.

திரு. கே. தவசி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டிபட்டியானது மதுரை புறநகர்ப் பகுதியின் மத்தியிலே அமைந்திருக்கின்ற ஒரு ஊராகும். இது தாலுக்கா அந்தஸ்து பெற்றிருக்கிறது. மாவட்டத்திலே இது நேஷனல் ஹைவேசை சார்ந்திருக்கிறது. இதன் பெரும் பகுதி, மதுரை மாவட்டத்திலே புறநகர்ப் பகுதியிலே அதிகமான வாகனங்களை பி.ஆர்.சி. மற்றும் ஆர்.எம்.டி.சி. இயக்கிக் கொண்டிருக்கிற பகுதியாகும். எனவே, இந்த ஆண்டு இல்லாவிட்டாலும் அடுத்த ஆண்டாவது மாண்புமிகு அமைச்சரவர்கள் இதைக் கவனத்தில் எடுத்துக்கொண்டு, பணிமனை அமைக்க மறுபரிசீலனை செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தேனி பகுதியில் மதுரை மாவட்டத்தைச் சார்ந்த நலப் பணித் திட்டங்களுக்காக வருகைத் தருகின்றபோது, அந்தப் பகுதியிலே தேனி, உசிலம்பட்டி போன்ற பகுதிகளில் புதியதாக பணிமனைகள் அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டு, இன்றைக்கு பணிமனைகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. ஆகவே ஆண்டிபட்டி இதற்கு மத்தியிலே இருக்கிற காரணத்தால், அதற்கு சாத்தியக்கூறு இல்லை என்று சொன்னேன். ஆகவே மீண்டும் அரசு இதைப் பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 29, திரு. ஆ. செல்லதுரை, மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்.

29—

புதிய போக்குவரத்துக் கழகம் அமைத்தல்

* **34340**—திரு. ஆ. செல்லதுரை :

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரனார் மாவட்டத்தில் கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தைத் தனியாகப் பிரித்து புதிய போக்குவரத்துக் கழகம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

1995 மார்ச் 16]

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும் ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்போது இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ஆ. செல்லதுரை : வணக்கத்திற்குரிய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈராயிரம் ஆண்டு தமிழ் அன்னை தவம் இருந்து பெற்றெடுத்து, அகிலம் சொல்லும் வழி நின்று, அருள் மணக்க, புகழ் சிறக்க ஆன்றோரும் சான்றோரும் புகழ்கின்ற வண்ணம் மக்களின் எண்ணங்களைப் புரிந்து, ஆட்சி நடத்தும் எங்கம்மா புனிதத் தாய், புரட்சித் தலைவியின் புனித பொற்பாதம் தொட்டு வணங்கி, என் கேள்வியைத் தொடுக்கின்றேன். மாண்புமிகு அமைச்சரவர்கள் இல்லையென்று சொன்னார்கள். நிர்வாகத் திறமைக்காக வேண்டி, ஒரு மாவட்டத்தை இரண்டாக, மூன்றாகப் பிரித்து திறம்பட மாவட்ட நிர்வாகம் நடைபெற வேண்டுமென்பதற்காக, இன்றைக்கு மாவட்டங்களைப் பிரித்திருக்கிறார்கள். அதைப்போல, இன்றைக்கு தமிழகத்திலே இருக்கிற அனைத்து மாவட்டங்களிலும், அந்தந்த மாவட்டத்திற்கு என தனியாக போக்குவரத்துக் கழகங்கள் அமைந்திருக்கின்றன. சிதம்பரனார் மாவட்டத்திலே மட்டும் தனியான போக்குவரத்துக் கழகம் இல்லாத காரணத்தினால் எங்களுடைய பகுதியிலே போக்குவரத்துக் கழகம் இயங்குவதற்கு மிகவும் சங்கடம் ஏற்படுகிறது. அதைப் போக்குகின்ற வகையிலேதான் மாவட்டத்தைத் தனியாகப் பிரித்து, எங்களுக்கு தனிப் போக்குவரத்துக் கழகம் அமைத்துத் தருவதற்கு அமைச்சரவர்கள் மறுபரிசீலனை செய்து தரவேண்டுமென்ற இந்தக் கேள்வியைக் கேட்டு, அதற்கு மறுபரிசீலனை செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பிறகுதான் புதியதாக 4 போக்குவரத்துக் கழகங்களை நாம் துவக்கி இன்றைக்கு பணிகளை மேற்கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் கேட்கின்ற பகுதி கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தில் 816 பேருந்துகள்தான் இயக்கப்படுகின்றன. பட்டாபிராமன் கமிட்டியினுடைய பரிந்துரையில் 300-லிருந்து 650 பேருந்துகள் இயக்கப்பட வேண்டுமென்று பரிந்துரைத்திருக்கிறார். அதேபோல தில்லைநாயகம் கமிட்டியினுடைய பரிந்துரையில் 750-லிருந்து 1120 பேருந்துகளை இயக்கப்பட வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். குறைந்தபட்சம்

750-க்கு குறையாமல் இருக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்கு மேல் 1120 வரையில் இருக்கவேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே அங்கே 816 பேருந்துகள் இருக்கிற காரணத்தினாலேதான் பிரிப்பதற்கு வாய்ப்பு இல்லை என்று நான் குறிப்பிட்டேன்.

முற்பகல் 10-40

திரு. ஆ. செல்லதுரை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரனார் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் பல்வேறுபட்ட குக்கிராமங்கள் உள்ளன. இன்றைக்கு சில குக்கிராமங்களுக்கு பேருந்துகளே போக முடியாத சூழ்நிலை இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேருந்துகளை அதிகமாகத் தந்து, எங்களுடைய மாவட்டத்திற்கு அந்த பேருந்துகளை தனியாகப் பிரித்து தருவார்களேயானால், மற்ற எல்லா மாவட்டங்களையும்விட ஒரு சிறப்பான மாவட்டமாக பேருந்துகளை இயக்கி, அதிக வருமானம் உள்ள பேருந்துகளாக ஆக்கித் தர எங்கள் மாவட்டம் தயாராக இருக்கிறது என்பதோடு, பேரறிஞர் அண்ணா காலத்தில் இங்கே பேரவைத் தலைவர் ஆகவும், அதற்கு பிறகு கூட்டுறவுத்துறை அமைச்சராகவும், எழுத்தறிவே இல்லாத மக்களையெல்லாம் படிப்பாளிகளாக்கித் தந்து, தமிழுக்காக போராடிய மறைந்த மாண்புமிகு சி. பா. ஆதித்தனார் பெயர் அதற்கு சூட்டப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் முதலிலே கேட்ட கேள்வி சில குக்கிராமங்களுக்கு பேருந்துகள் வேண்டும் என்று சொன்னார்கள். பாதை வசதி சரியாக இருந்தால், எந்தப் பகுதிக்கு வேண்டும் என்று உறுப்பினர் குறிப்பிட்டால், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி ஆட்சியில் அங்கே பேருந்துகள் இயக்கப்படும் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். அதேபோல மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோது கூறிய அந்த போக்குவரத்துக் கழகத்தைப் பிரிக்கின்ற சாத்தியக் கூறுகள் இப்போது இல்லை. பிறகு உங்களுடைய ஆலோசனையை அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஓ. எஸ். அமர்நாத்.

திரு. ஓ. எஸ். அமர்நாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக ஆரம்பிக்கப்படுகின்ற போக்குவரத்துக் கழகங்கள் அல்லது புதியதாக துவங்கப்படுகின்ற கிளை பேருந்து நிலையங்களிலும் மக்கள் விரும்புகிற வண்ணம் கவர்ச்சியான பொலிவான புதிய பேருந்துகள் இயக்கப்படுகின்றன. அப்படி புதியதாக, புதிய பொலிவுடன் ஏற்படுத்தப்

படுகின்ற பேருந்துகளில் பயணம் செய்கின்ற போது பயணிகளுக்கு அதிகமான பாதுகாப்பு உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு கேள்வி கேட்டிருக்கிறார்கள். புதிதாக வடிவமைக்கப்பட்டிருக்கிற பேருந்துகளிலே பயணம் செய்கிறபோது விபத்துக்கள் இல்லாமல் அவர்கள் பயணம் செய்யும் வண்ணம் அந்த பேருந்துகள் வடிவமைக்கப்பட்டிருக்கிறதா என்று கேட்டிருக்கிறார்கள். மேலை நாடுகளில் உள்ளது போலத்தான் இப்போது புதிதாக வடிவமைக்கப்பட்டிருக்கிற பேருந்துகளிலே வடிவமைக்கப் பட்டிருக்கின்றன. முன் பகுதியிலே அவர்கள் சென்று ஏறுவதற்கும் இறங்குவதற்கும், முன் பகுதியிலே ஸ்டெப்ஸ் வைத்துக் கொண்டிருப்பதற்குக் காரணம், இங்கே இருக்கிற பேருந்துகளில் இரவு நேரங்களில் இயக்கப்படுகிறபோதும், தொலை தூரங்களுக்கு இயக்கப்படுகிறபோதும் ஓட்டுநர் கண்காணித்து பேருந்துகளிலே பத்திரமாக ஏறுகிறார்களா, இறங்குகிறார்களா என்பதற்கு ஒன்று. இரண்டாவதாக, அப்படி இரவு நேரங்களில் பயணம் செய்கிறபோது இரண்டு இடங்களிலே பேருந்துகளில் இருந்து ஏறுகின்ற, இறங்குகின்ற படிகள் வைக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. மேலை நாடுகளில் இருப்பதைப் போல நம்முடைய மாநிலத்திலேயும் அது இயக்கப்பட வேண்டும் என்றுதான் அதை நாங்கள் வைத்துக் கொண்டிருக்கிறோம். தனியாரும் அதைப் போலத்தான் பேருந்துகளிலே முன் பகுதியில்தான் ஏறுகிற இடமும் இறங்குகிற இடமும் என்று வைத்திருக்கிறார்கள். அதைப்போல புதிதாக துவங்கப்பட்டிருக்கிற நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சி தலைவியினுடைய புனிதப் பெயரால் உருவாக்கப்பட்டிருக்கிற பேருந்துகள் கூட இன்றைக்கு 'வீல் பேஸ்ட்' என்று சொல்லக்கூடிய வகையில்-முன் பக்கத்திலே இருக்கிற படியை மாற்றி, 'வீல் பேஸ்ட்' என்று சொல்லப்படுகிற அதற்கு பின்னாலே, முன்புறம் இருக்கிற வீலுக்கு பின்பக்கம் அந்தப் படிகளை மாற்றி—பொது மக்கள் அதிலே பயணம் செய்வதற்கு வரும்போது பத்திரமாக செல்வதற்கும், பயணம் செய்கிறபோது ஏதாவது விபத்துக்கள் ஏற்பட்டாலும்கூட அதிலேயும் பாதுகாப்பாக, வசதியாக இருக்கும் நடவடிக்கைகளை நாங்கள் மேற்கொண்டு இருக்கிறோம். அதிலே எந்த குறைபாடும் இல்லை. மேலை நாடுகளிலே எப்படி இயக்கப்படுகின்றதோ அதைப் போலத்தான் நாமும் இயக்கிக் கொண்டு இருக்கிறோம். மேலை நாடுகளில் எப்படி வடிவமைக்கப்பட்டிருக்கிறதோ அதைப்போலத்தான் நம்முடைய பேருந்துகளும் வடிவமைக்கப்பட்டிருக்கின்றன. தனியாரும் அதேபோலத்தான் வடிவமைத்து அந்தப் பேருந்துகளை இயக்குகிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.